செய்தி வெளியீடு எண்.809 நாள்.29.9.2008

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (பவர்ஃபைனான்ஸ்) முற்றிலும் தமிழக அரசுக்கு சொந்தமான வங்கி சாரா நிதி நிறுவனமாக 1991 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டிலுள்ள மின் விசை திட்டங்களுக்கு கடன் உதவி அளித்து வரும் இந்நிறுவனம் 2007–2008 ஆம் ஆண்டில் வரிக்குப்பின் நிகர இலாபமாக ரூ.32.28 கோடி ஈட்டியுள்ளது. இதுவரை (26/09/2008) ரூ.2943 கோடி நிகர வைப்பீட்டுத் தொகையாக இந்நிறுவனம் பெற்றுள்ளது. 26/09/2008 வரை **ரூ. 8,772.57** கோடி மொத்த கடனாக அனுமதிக்கப்பட்டு, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு தவணை கொள்முதல் கடனாகவும் மற்றும் குறித்த கால கடனாகவும் வழங்கியுள்ளது. 26/09/2008 வரை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கப்பட்ட நிகர கடன் தொகை **ரூ.3,534.61** கோடியாகும். இது மட்டுமன்றி **ரூ.105.00** கோடிகளை பிற நிறுவனங்களான பூம்புகார் கப்பல் கழகத்துக்கும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கும் கடனாக வழங்கியுள்ளது.

தமிழக அரசின் நல உதவித் திட்டங்களின் முதலீடு

**சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இதுவரை** ரூ.354 **கோடிகளை** 2,32,174 **குழந்தைகள் பயன்பெறும் வகையில் வைப்பீட்டுத் தொகையாக வரப் பெற்றுள்ளது.**

ஒரு கால பூஜை திட்டத்தின் கீழ் 10,202 திருக்கோயில்களுக்காக ரூ.25.51 கோடிகள் வைப்பீட்டுத் தொகையாக பெறப்பட்டுள்ளது.

பள்ளி மாணவ மாணவியரின் வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் விபத்தில் இறந்து விட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ அவர்களது கல்வி மற்றும் பராமரிப்பு செலவிற்காக நிதி வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.3.75 கோடி வைப்பீடு நிதியாகப் பெறப்பட்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட 150 பெற்றோரை இழந்த மற்றும் திருமணமாகாத வளரிளம் பெண்களின் பெயரில் வைப்பீடு செய்ய அரசிடமிருந்து ரூ.6.76 கோடி பெறப்பட்டுள்ளது.

23/09/2008 அன்று நடைபெற்ற இந்நிறுவனத்தின் 17வது ஆண்டு பொதுக்குழு கூட்டத்தில் பங்கு முதலீட்டின் மீது 2007–2008ம் ஆண்டிற்கு 20 சதவிகித இடைக்கால ஈவுத்தொகையாக ரூ.4.40 கோடியை அரசுக்கு வழங்க முடிவு எடுக்கப்பட்டது. அதன்படி ஈவுத்தொகைக்கான காசோலையை மாண்புமிகு தமிழக முதல்வரிடம் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் 29.09.2008 அன்று வழங்கினார். அவ்வமயம் எரிசக்தித்துறை முதன்மைச் செயலர் மற்றும் இந்நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ஆகியோர் உடனிருந்தனர். 1995–96–ம் ஆண்டு முதல் மொத்த ஈவுத்தொகையாக இதுவரை ரூ.52.02 கோடிகளை பவர்ஃபைனான்ஸ் தமிழக அரசுக்கு வழங்கியுள்ளது. மேலும் இந்நிறுவனம் இது வரை நிகர லாபமாக ரூ. 272.29 கோடி ஈட்டியுள்ளது.

தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9